2014 ஆகஸ்ட் 12]

இந்தியாவிலேயே அதிகமாகப் பேருந்துகள் இயக்கப்படுகின்ற மாநிலங்கள் 4. அதில் முதலாவதாக இருப்பது ஆந்திர மாநிலம்-ஒன்றுபட்ட ஆந்திரா அதிகப் பேருந்துகளை இயக்கியது. இரண்டாவதாக இருப்பது கர்நாடக மாநிலம். மூன்றாவது இடத்திலிருப்பது நமது தமிழ்நாடு. மூன்றாவது இடத்தில் தமிழக மக்களுக்குப் பேருந்துச் சேவைகளை வழங்கிக் கொண்டிருந்தாலும்கூட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சிரிய திட்டங்களினால், சராசரியாக ஒரு பேருந்தில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கையை அதிகமாகக் கொண்ட மாநிலங்களில் முதல் இடத்தை வகிப்பது தமிழகம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில்தான், தமிழகத்தில் ஒரு பேருந்திற்கு அதிக அளவாக சராசரியாக நாளொன்றுக்கு 74.52 சதவீதம் பயணிகள் பயணிக்கின்றனர். மகத்தான சேவைகளை மக்களுக்கு வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதன்பேரில், பல்வேறு வழித்தடங்களில் மக்களுடைய பயன்பாட்டிற்காகப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய திருமங்கலத்திலிருந்து சென்னைக்கு Ultra Deluxe Bus இயக்குவதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, மக்களுடைய நலன் கருதி, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா வரிசை எண் 412, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

412—

கூட்டுறவு பால் பண்ணை

***32362—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2014 ஆகஸ்ட் 12

மேட்டூர் தொகுதி, மேச்சேரியில் கூட்டுறவு பால் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மேட்டூர் தொகுதி, மேச்சேரியில் பால் பண்ணை அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லையென்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே கடந்த இரண்டு வருடங்களாகப் பருவ மழை பொய்த்ததன் காரணமாக ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால், கால்நடைகளுக்குப் பசுந்தீவனப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. கால்நடைகளின் நலன் மற்றும் பால் உற்பத்தியைப் பாதுகாக்கின்ற வகையில், பால் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு இலவசமாகக் கால்நடைத் தீவனம் மற்றும் தாது உப்புக் கலவை பசுந்தீவனம் வழங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'கேட்காமலே கொடுக்கின்ற தெய்வம்' மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே, தமிழகத்திலே வறட்சி என்று வருகின்றபொழுது யாருடைய கோரிக்கையும் இல்லாமல் விவசாயிகளுக்கு நிவாரணத் தொகையை மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கினார்கள். வாயில்லா ஜீவன்களாகிய கால்நடைகளின் பசியைப் போக்குவதற்காக, சிறந்த முறையிலே,

2014 ஆகஸ்ட் 12]

இந்தியாவிலேயே தீவனத்திற்கு மானியத் தொகை வழங்கிய ஒரே மாண்புமிகு முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள், எந்தச் சமயத்தில், எந்த முடிவெடுக்க வேண்டுமோ, அதை உரிய நேரத்தில் எடுப்பார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதியிலுள்ள கிராமங்களில் இயங்கிவரும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தக் கட்டடமும், பால் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக லிட்டருக்கு ரூ.4/-ம் வழங்குவதற்கும், நாமக்கல் மாவட்டத்திலே புதிதாகக் கூட்டுறவுப் பால் பண்ணை அமைப்பதற்கும் அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்துதான் புதிதாகப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடத்தைக் கட்டிக்கொள்ள வேண்டும். நாமக்கல் மற்றும் சேலம் ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் சேர்த்து, சேலம் மாவட்டத்திலே மாவட்ட ஒன்றியப் பால் பண்ணை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அதனால், நாமக்கல் மாவட்டத்தைத் தனியாகப் பிரித்து, தற்போது கூட்டுறவுப் பால் பண்ணை அமைக்கும் சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன் அவர்கள்.

திரு. கு.வ. மார்க்கண்டேயன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் சட்டப் பேரவைத் தொகுதி நான்கு ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கிய பகுதியாகும். அங்கு எந்தவொரு தொழிற்சாலையும் இல்லை. அந்தப் பகுதி மக்கள் முழுக்க, முழுக்க விவசாயத்தையும், கால்நடை வளர்ப்பையுமே பிரதானத் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். விளாத்திகுளம், சட்டப் பேரவைத் தொகுதியினுடைய தலைமை இடமாகும். அந்த இடத்தில் பால் பண்ணை மற்றும் பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாசியோடு அமைத்துத் தர வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்புடன் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட விளாத்திகுளம் தொகுதியிலே, பால் கொள்முதல் பெருகுகின்றபொழுது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா வரிசை எண் 413, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

413—

பழங்கள் பதப்படுத்தும் நிலையம்

***17198—திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—